30-04-2024.
O.S.No. 177/2018

பி.வா. சா. 1 நாராயணபிள்ளை அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

முதல் விசாரணை தொடர்ச்சி

05.11.1996ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு திண்டுக்கல் தாசில்தார் வழங்கிய பான் புரோக்கர்ஸ் லைசென்ஸ் அசல் பிவாசாஆ.17.

22.01.1995ம் தேதி 2ம் பிரதிவாதி(ஆதிலட்சிமி)யின் கணவர் கிருஷ்ணமூர்த்தி 1ம் பிரதிவாதியிடம் பெற்ற பணத்திற்காக எழுதிய கடிதம் அசல் பிவாசாஆ.18.

31.08.2004ம் தேதி 1ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதி பெயரில் திண்டுக்கல் தாலுகா ஆபீஸ் ரோடு, MCS காம்ப்ளக்சில் STD பூத் நடத்தி வந்ததற்கு BSNL நிறுவனம் வழங்கிய Demand note and memo of Registration அசல் பிவாசாஆ.19.

07.07.2005ம் தேதி 1ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதி பெயரில் திண்டுக்கல் ஆரியபவன் பீடா ஸ்டால் முகவரியில் STD பூத் நடத்தி வந்ததற்கு BSNL நிறுவனம் வழங்கிய பில்கள் 2 எண்ணம் அசல் பிவாசாஆ.20 வரிசை.

**5**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி கலாவையும், என் மகன் மணிகண்டனையும்(5ம் பிரதிவாதி) அதிகமாக படிக்க வைத்தேன் என்றால் சரிதான். திண்டுக்கல்லில் இருக்கும் T.S.No.288 கதவு எண்.80 என்ற சொத்தின் ஒருபகுதியை என் மனைவி என் மகன் 5ம் பிரதிவாதி மணிகண்டன் பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அப்போது 5ம் பிரதிவாதி மணிகண்டன் மைனராக இருந்தார். அந்த சொத்தில் மற்றொரு பகுதியை என் பெயரில் நான் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய சொத்தை 5ம் பிரதிவாதி மணிகண்டன் பெயரில் ஒரு பதிவு செய்த உயில் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். என்னுடைய சொந்த ஊர் ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், சித்திரக்குடி ஆகும். அந்த ஊரில் எனக்கு

நிலபுலன்கள் இல்லை. பெரும்பாலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளவர்கள் வேலை இல்லை என்றால் வெளிநாடு செல்வார்கள் என்றால் சரிதான். நிலங்கள் உள்ளவர்கள் சீமக்கருவேல மரங்கள் விளைவித்து கரியாக்கி வியாபாரம் செய்வார்கள் என்றால் சரிதான். நான் ஸ்ரீலங்காவுக்கு சென்று வியாபாரம் செய்தேன். அதன் பின்னர் திண்டுக்கல்லுக்கு வந்து ஆரியபவான் ஓட்டலுக்கு அருகே கடை வைத்து நடத்தி வருகிறேன். என் மனைவி இறந்துவிட்டார். நான் தனியாக வசித்து வருகிறேன். பிள்ளைகள் யாரும் என்னை கவனிக்கவில்லை என்றால் சரிதான். கலா, ஆதிலட்சுமி, வாசுகி, அமுதா அனைவரும் என் மகள்கள்தான். மேற்படி மகள்களுக்கு நல்லபடியாக சீர் செய்து திருமணம் செய்துவைத்தேன். என்னிடம் என் மகள் கலா எப்போதும் சொத்தில் பாகம் கேட்கவில்லை. இந்த வழக்கை என்னுடைய செலவு துகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**6** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

6 ம் பிரதிவாதி சரஸ்வதி என் மருமகள். அவர் பெங்களூரில் இருக்கிறார். அவர் பெங்களூரில் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார். தாவா 3 வது அயிட்டச் சொத்தான ரோகினி இன்டர்நேசனல் பள்ளிக்கும் இந்த வழக்குக்கும் சம்மந்தம் இல்லை. அந்த சொத்தை வாங்க நான் எந்த பணஉதவியும் செய்யவில்லை. அந்த சொத்தில் வாதி பாகம் கேட்க அவருக்கு எந்தவித உரிமையும் இல்லை.

**7** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

திண்டுக்கல் டவுன், காளிமுத்துபிள்ளை சந்தில் உள்ள கதவு எண்.79 ல் உள்ள 2 வது அயிட்டச் சொத்து நானும் என் மனைவியும் சுயமாக கிரையம் பெற்ற சொத்தாகும். எங்களுக்கு சொத்துக்களை கிரையம் பெறும் அளவுக்கு பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும் அந்த சொத்துக்கள் மூலம் எந்த வருமானமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தை கிரையம் பெற்றபின்ன அதை வங்கியில் அடமானம்

வைத்துத்தான் மராமத்து செய்தோம். குடும்ப அவசிய தேவை முன்னிட்டு 18.5.2005 ம் தேதி தாவா 2 வது அயிட்டச்சொத்தை 7 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்தோம் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரம் எழுதும்போது வாதி மற்றும் அனைத்து மக்களுக்கும் தெரியும். வைரமணிக்கு எழுதிக்கொடுத்த வாதசாஆ.3 கிரையப்பத்திரத்தில் வாதியும் மற்ற பெண் மக்களும் என் மகனும் சாட்சிகள் என்ற இடத்தில் கையெழுத்து செய்துள்ளார்கள். கிரையத் தொகையை வாங்கி மனிதாபிமான அடிப்படையில் என் பிள்ளைகளுக்கு பிரித்துக்கொடுத்தேன். அந்த கிரையத்திற்கு பின்னர் சொத்து வைரமணிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். 2 வது அயிட்டச் சொத்தை சரியான பிரதிபிரயோஜனத்திற்குத்தான் வைரமணிக்கு கிரையம் செய்தேன். நான் கிரையம் செய்தபோது அந்த சொத்தில் உள்ள வீடு ஓட்டு வீடாக இருந்தது. வைரமணி கிரையம் வாங்கிய பின்னர் ஓட்டு வீட்டை இடித்துவிட்டு 15 லட்சம் செலவு செய்து புதிய வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். வைரமணி கிரையம் பெற்ற சொத்தில் வாதி கலா, மற்ற மக்களுக்கும் எந்தவித பாத்தியமும் இல்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை -ஒத்தி வைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.04.30 16:07:15 +0530

Principal District Judge,
Dindigul.